செ.செ.எண் :290 நாள் : 24.05.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

அறிக்கை – 24.5.2011

மேல்நிலைக் கல்வி (+2) தேர்ச்சிப் பெற்றவுடன், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பணி மூப்பு தகுதி உடனடியாக கிடைக்க வேண்டும் என்பதால், மதிப்பெண் பட்டியல் பெற்ற உடனேயே வேலை வாய்ப்பு அலுவலகங்களை +2 தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர் நாடுகின்றனர். அவ்வாறு +2 தேர்ச்சி பெற்ற அனைவரும் உடனடியாக வேலைவாய்ப்பு அலுவலகங்களை அணுகுவதால் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. மேலும், கால விரையம், போக்குவரத்து செலவு ஆகியவை ஏற்பட்டு, மாணவ, மாணவியர் பெரும் இன்னலுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு மாணவ மாணவியருக்கு ஏற்படும் பிரச்சனை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன், அதனைத் தீர்க்கும் வகையில் மதிப்பெண் பட்டியலை பள்ளியில் பெறும் நாளிலேயே, மாணவ மாணவியர் பயிலுகின்ற பள்ளியிலேயே வேலை வாய்ப்பு வேண்டி ஆன்லைன் மூலம் பதிவு செய்ய ஆணையிட்டுள்ளேன்.

இந்த 2011 ஆம் ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ, மாணவியர்கள் பள்ளியிலிருந்தே ஆன்லைன் மூலம் பதிவு செய்ய நான் அறிவுறுத்தியுள்ளேன்.

மேல்நிலைக் கல்வி மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் நாளான 25.05.2011 லிருந்து 15 நாட்களுக்குள் அந்தந்த பள்ளியிலேயே மாணவ, மாணவியர் வேலை வாய்ப்புக்காக பதிவு செய்து, வேலை வாய்ப்பு பதிவு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு 15 நாட்களில் பதிவு செய்யப்படும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் 25.05.2011 தேதியிட்ட பதிவு மூப்பு வழங்கப்படும்.

இப்பணியை பள்ளிக்கல்வித் துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் எல்காட் நிறுவனம் ஆகியன இணைந்து செய்யும்.

இவ்வாறு பதிவு செய்யும் மாணவ மாணவியர்கள் தங்களது மதிப்பெண் சான்றிதழ் பெற தாங்கள் பயின்ற பள்ளிக்குச், செல்லும் போது அவருடைய பெயர் இடம் பெற்றுள்ள குடும்ப அட்டை, மற்றும் குடும்ப அட்டையின் நகலினை தவறாது

எடுத்துச் செல்ல வேண்டும். மேலும், பத்தாவது கல்வித் தகுதியினை வேலை வாய்ப்பக அலுவலகத்தில் ஏற்கனவே பதிவு செய்தவர்கள் அதற்கான வேலை வாய்ப்பு அடையாள அட்டையினையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். பதிவுதாரர்கள் மாற்றுத் திறனாளிகளாக இருப்பின் தங்களுடைய கல்வித் தகுதியை பள்ளியில் பதிவு செய்த பின்னர் தங்கள் முன்னுரிமையை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வேலை வாய்ப்பு வேண்டி தாங்கள் பயின்ற பள்ளியின் மூலம் இணையதள வசதியுடன் பதிவு செய்யும் மாணவ மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பக அலுவலக பதிவு எண், பதிவு செய்யும் நாளன்றே அவர்களுக்கு வழங்கப்படும். இப்பணி 25.05.2011 முதல் 15 நாட்களுக்கு நடைபெற உள்ளதால் மாணவ மாணவியர்கள் இந்த அரிய வாய்ப்பினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு படித்த பள்ளியிலிருந்தே ஆன்லைன் மூலம் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்யப்படும் வசதி இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9